முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
OS.No.165/2024

Witness PW 3

பெயர்: பழனிச்சாமி

த/பெ.: முருகன்

இன்று (24/07/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.
சத்தியமாக சொல்கிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள்ள னக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து எப்போது போட்டேன் என்றால் 10, 15 நாட்களுக்கு முன்பு போட்டேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் என்னை அழைத்து வந்தது என்றால் வாதி தான் அழைத்து வந்தார். ராஜேந்திரன் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் பில்ராம்பட்டு. பில்ராம்பட்டு கீிராமத்திற்கு போயிருக்கிறேனா என்றால் போய் இருக்கிறேன். ராஜேந்திரன் தந்தையார் பெயர் தெரியுமா என்றால் தெரியும முனுசாமி. ராஜேந்திரன் எத்தனை வருமாக தெரியும் எனறால் ராஜேந்திரனை தெரியாது. வாதி ரவிச்சந்திரன் எத்தனை வருடமாக தெரியும் என்றால் 30 வருடமாக எனக்கு நண்பர். வாதி குடும்பத்தின் நல்லது கெட்டது விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் பிராமிசரிநோட்டை நான் எழுதினேன் அதனால் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் விழுப்புரம் திருக்கோவிலூர் நீதிமன்றங்களில் எத்தனை முறை சாட்சி சொல்லியுள்ளேன் என்றால் நான் எப்போதும் சாட்சி சொன்னதில்லை, நான் எத்தனை பாண்டு எழுதியுள்ளேன்ன னற்றால் சுமார் 9 அல்லது 10 பாண்டு எழுதியுள்ளேன். பிராமிசரி நோட்டுக்கு வாசகம் வாதி ரவிச்சந்திரன் சொன்னாரா என்றால் இல்லை. வாசகம் நானே எழுதினேன். எத்தனை மணிக்கு பாண்டு எழுதினேன் என்றால் காலை சுமார் 10 மணிக்கு எழுதினேன். நான் எழுதிய பேனாவில் தான் சாட்சிகள் அனைவரும் கையெழுத்து போட்டார்கள் என்றால் சரிதான். என்னுடைய பேனாவில் பிரதிவாதி ராஜேந்திரன் எத்தனை கையெழுத்து போட்டார் என்றால் 2 கையெழுத்து போட்டார். பிரதிவாதி பில்ராம்பட்டு கீராமத்தில் எந்த தெருவில் வசிப்பதாக எழுதியுள்ளேன் என்றால் தெரியாது. ரவிச்சந்திரனின் தந்தையார் பெயர் கோவிந்தன். பிராமிசரிநோட் சாட்சி நடராஜன் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் சின்னசெவலை கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால் பழக்கம் இல்லை கடையில் பார்த்துள்ளேன். சாட்சிகள் அவர்களுடைய ஊர் பெயரை எழுதி கையெழுதது போட்டுள்ளார்களா என்றால் நடராஜன் ஊர் பெயர் போடவில்லை. பாபு ஊர் பெயர் போட்டுள்ளார். நான் என்னுடைய ஊர் பெயரை போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். நடராஜன் தற்போது எங்குள்ளார் என்றால் உடல் நிலை சரியில்லாமல் பாண்டிச்சேரி மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார். எப்படி அவருக்கு உடல்நிலையில்லை என்று எனக்கு தெரியும என்றால் நான் நடராஜனை சாட்சி சொல்ல போக வேண்டுமென்று கூப்பிட போனேன் அதனால் தெரியும். பிரதிவாதியின் மகன்

சுபாஷுக்கும் வாதிக்கும் டாடா ஏசி வேன் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்பது தெரியுமா என்றால்எ னக்கு தெரியாது. அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது நான் வாதியுடன் சென்றேனா என்றால் இல்லை. வாதியிடம் பிரதிவாதி பணம் எதுவும் வாங்கவில்லை நான் பீராமிசரி நோட்டு எழுதிக்கொக்கவும இல்லை. பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

x

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.
Sd/A.Tamilselvam,M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram

முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
OS.No.165/2024

Witness PW 2

பெயர்: பாபு

த/பெ.: அருணகிரி

இன்று (24/07/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.
சத்தியமாக சொல்கிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி ரவிச்சந்திரன் எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால் 20 வருடமாக எனது நண்பர். நான் எந்த கிராமம் என்றால் சித்தலிங்கமடம். யார் பேரில் வாதி வழக்கிட்டுள்ளார் என்றால் ராஜேந்திரன் பேரில் வழக்கிட்டுள்ளார். இந்த வழக்கில் சாட்சி சொல்ல அழைப்பாணை எதாவது வந்ததா என்றால் இல்லை. நான் இதுவரை எத்தனை பாண்டில் சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேன் என்றால் 2, 3 பாண்டில் கையெழுத்திட்டுள்ளேன். இதற்கு முன்பாக நான் நீதிமன்றத்தில் சாட்சிசொல்ல சென்றுள்ளேனா என்றால் இல்லை இதுதான் முதல் முறை. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாணப் பத்திரிக்கையில் கண்டுள்ள விவரங்கள் வாதி ரவிச்சந்திரன் தகவல் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் முதன்மை சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள பழனிச்சாமி என்பவரின் தந்தையார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. பழினிச்சாமியை பார்த்துள்ளேனா என்றால் அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் தான். பழனிச்சாமிக்கு என்ன வேலை என்றால் விவசாயம் செய்வார். முதன்மை சாட்சிய பிரமாணப் பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள நடராஜன் என்பவரின் தந்தையார் பெயர் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் தினசரி வெல்டிங் ஓர்க்ஷாப்புக்கு செல்வேனா எனற்றால் இல்லை, வேலை இருந்தால் போவேன். வாதியுடன் ஓர்க்ஷாப்பில் எவ்வளவு காலமாக இருக்கிறேன் என்றால் சுமார் 15, 20 வருடமாக வேலை பார்க்கிறேன். எதற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் ரவிச்சந்திரனிடம் ராஜேந்திரன் பணம் கேட்டார் நான் வண்டி வேலை செய்வதற்காக ஓர்க்ஷாப்புக்கு வந்திருந்தேன் என் எதிரில் பணம் வாங்கினார் அதற்கு நான் சாட்சி கையெழுத்து போட்டேன் அதற்காக நான் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். என்றைய தினம் பணம் கேட்டார் என்றால் பாண்டுஎழுதிய தினத்தில் கேட்டார் அன்றைய தினமே பணம் கொடுத்தார். ரவிச்சந்திரன் வங்கியிலிருந்து பணம் எடுத்து வந்தாராள ன்றால் எங்கிருந்து பணம் எடுத்து வந்தார் என்று தெரியாது. ஓர்க்ஷாப்பில் கொடுத்தார். பாண்டை எழுதியவர் அவராக வந்தாரா ரவிசந்திரன் அழைத்து வந்தாரா அல்லது ராஜேந்திரன் அழைத்து வந்தாரா என்றால் யார் அழைத்து வந்தது என்று எனக்கு தெரியாது, ஆனால் அவராக வந்தார். பாண்டு வருவாய் வில்லை யார் வாங்கி வந்தது என்றால் யார் வாங்கி வந்ததது என்று எனக்கு தெரியாது. பாண்டு எழுதுவதற்கு வாசகங்கள் யார் சொன்னது என்றால் பிரதிவாதி ராஜந்திரன் அவரது ஊர் விலாசம் சொன்னார் பழனிச்சாமி அதனை எழுதினார். பழனிச்சாமி பாண்டு எழுத உரிமம் பெற்றுளளாரா என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடைய ஊர் தெருப்பெயர் பாண்டில் எழுதினேனா என்றால் என் பெயர், அப்பா பெயர், ஊர் பெயர்

எழுதினேன். இன்னோரு சாட்சி பெயர் நடராஜன். அவருக்கு உடல்நிலை சரியில்லை. அவர் எந்த கிராமம் என்றால் சின்னசெவலை. அவருக்கு மஞ்சள் காமாலை அதனால் வரவில்லை. அவர் ஊர் பெயர் அப்பா பெயர் எழுதி கையெழுத்திட்டாரா என்றால் ஆமாம். தலைப்பெழுத்து (Initial ) தெரியுமா என்றால் தெரியும் பெயருக்கு முன்பாக எழுதுவது. பிரதிவாதி பாண்டில் எத்தனை கையெழுத்து போட்டார் என்றால் 2 கையெழுத்து போட்டார். அவர் தலைப்பெழுத்து போட்டாரா என்று பார்த்தேனா என்றால் அது ஞாபகம் இல்லை. பாண்டு எழுதியவர் ஊர் பெயரை எழுதினாரா என்றால் எழுதினார். எல்லோரும் ஒரே பேனாவில் தான் கையெழுத்து போட்டோமா என்றால் எல்லோரும் ஒரே பேனாவினால் தான் கையெழுத்து போட்டோம். நான் வாதி ரவிச்சந்திரன் என்பவருக்கு வேண்டப்பட்டவர் அதனால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் பில்ராம்பட்டு. பிரதிவாதி கக்கன் தெருவில் வசித்து வருகிறார் என்றால் அது தெரியாது. பிரதிவாதியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் பிரதிவாதியை எனக்கு தெரியாது பணம் வாங்கும் போது தான் தெரியும். பிராமிசரி நோட் சாட்சி நடராஜன் என்பவருக்கு எத்தனை வயது என்றால் 55 வயது இருக்கும். வாதி ரவிச்சந்திரன் வேன், லாரி, டிராக்டர் போன்ற வாகனங்களை வாங்கி கைமாற்றி விடுவார் என்றால் சரிதான். சாட்சி தாமாக பட்டறையில் வேலை செய்து விற்பார் என்று சாட்சியம் அளிக்கிறார். பிரதிவாதியின் மகனுக்கும் வாதி ரவிச்சந்திரனுக்கும் பிரச்சனை ஏற்பட்டு அரகண்டநல்லூர் காவல் நிலையத்திற்கு விசாரணக்காக நானும் வாதியுடன் சென்றேன் என்றால் சரியல்ல. அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு ஆதராக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

x

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.
Sd/A.Tamilselvam,M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram

முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
OS.No.165/2024

Witness PW 1

பெயர்: ரவிச்சந்திரன்

த/பெ.: கோவிந்தன்

இன்று (24/07/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.
சத்தியமாக சொல்கிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் வெல்டிங் ஒர்க் ஷாப் வைத்திருக்கிறேன் டிப்பர் லாரிக்கு வெல்டிங் வைப்பேன் அதன் மூலமாக பிரதிவாதீயை தெரியும். பிரதிவாதியின் ஊரிலிருந்து எங்கள் ஒர்க்ஷாப்புக்கு வந்து வண்டி வெல்டிங் செய்து சென்றார்கள் அதன் மூலமாக பிரதிவாதியை எனக்கு பழக்கம். பிரதிவாதியின் மகன் சுபாஷ் என்றால் சரிதான். பிரதிவாதி மகன் சுபாஷ் எனக்கு டாடா ஏசி வண்டியை விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. அந்த வண்டி விற்பனை செய்த வகையில் நான் பிரதிவாதியின் மகன் சுபாஷசக்கு ரூ.50,000/- கொடுக்க வேண்டிய பாக்கி உள்ளது என்றால் சரியல்ல. வண்டியை வாங்கி விற்கும் வேலை எனக்கு என்றால் இல்லை. சுபாஷ்ன் வண்டியை நான் பண்ருட்டியில் உள்ள நபருக்கு விற்பனை செய்தேன் என்றால் சரியல்ல. என்ஓசி வாங்கித் தர வேண்டுமென்று கேட்டதில் எனக்கும் பிரதிவாதியின் மகன் சுபாஷுக்கும் மன வருத்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்.ஓ. சி. வாங்கித் தரவிவல்லை என்று பிரதிவாதியின் மகன் சுபாஷீன் இரு சக்கர வாகனமான ஸ்பிளண்டர் பிளஸ் வண்டியை எடுத்துச்சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் வண்டியை எடுத்துச் சென்றதை ஊர் மக்கள் தவறு என்று என்னை கண்டித்தார்கள் என்றால் சரியல்ல. சுபாஷ் வண்டியை நான் எடுத்துச் சென்றது சம்மந்தமாக அரகண்டநலலூர் போலிசில் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. அதன் பிறகு சுபாஷ் என் ஓ சி வாங்கிக்கொடுத்துவிட்டார். விரோதத்தை மனதில் வைத்து சுபாஷின் தந்தையாரான பிரதிவாதி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சி தாமாக பிரதிவாதி கொடுத்த காசோலையை நான் வைத்துள்ளேன் என்று கூறுகிறார். எந்த தேதியில் பிரதிவாதி என்னிடம பணம் கேட்டு நான் கொடுத்தேன் என்றால் 17.4.2021 அன்று கொடுத்தேன். அதற்கு 10 நாட்களுக்கு முன்பு என்னிடம் பணம் கேட்டிருந்தார். பாண்டு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் சித்தலிங்கமடம் கிராமத்திலுள்ள என்னுடைய ஒர்க்ஷாப்பில் வைத்து எழுதப்பட்டது. எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்றால் காலை 10 மணிக்கு எழுதப்பட்டது. சாட்சிகள் எப்போது வந்தார்கள் என்றால் சாட்சிகள் வெல்டிங் செய்வதற்காக வந்திருந்தார்கள். சாட்சிகள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 10 மணிக்கு வந்தார்கள். பிராமிசரி நோட்டில் 1வது சாட்சியான நடராஜனை எப்படி தெரியும என்றால் என்னிடம் வேலை செய்வதற்கு வருவார் 2, 3 வருடமாக பழக்கம். 2வது சாட்சியான பாபு என்னிடம் வேலைக்கு வந்தவர் அதனால் பழக்கம். பாண்டை எழுதியது யார் என்றால் எங்கள் ஊரைச் சேர்ந்த பழனிச்சாமி அவரை யாரை அழைத்து வந்தது என்றால் அவர் பக்கத்து டீ கடைக்கு வந்திருந்தார் அப்போது

பிரதிவாதி அவரை அழைத்து வந்தார். பிரதிவாதி கையெழுத்திடும்போது தலைப்பெழுத்து ( Initial ) போட்டாரா என்றால் 'ரா' என்று போட்டார். நடராஜன் அவருடைய ஊர் பெயர் எழுதினாரா என்றால் அது தெரியவில்லை. மற்றொரு சாட்சி அவரது ஊர் பெயர் போட்டாரா என்றால் அதுவும் ஞாபகம் இல்லை. பணம் எப்படி கொடுத்தேன் என்றால் இரண்டு 500/- ரூபாய் தாள் கட்டுகளாக கொடுத்தேன். வங்கியிலிருந்து எடுத்து வந்தேனா என்றால் வேறு ஒருவரிடம் கேட்டேன் கொடுத்தார் அதைத் தான் கொடுத்தேன். அவ்வாறு பணம் கொடுத்தவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது- அவ்வாறு பணம் கொடுத்தவர் அன்றைய தினமே கொடுத்தாரா என்றால் அன்றேதான் கொடுத்தார். நான் வரவு செலவு கணக்கு எழுதி வைத்துள்ளேனா என்றால் ஒர்க்ஷாப்புக்கு வேலை ஆர்டர் வந்தால் எழுதி வைப்பேன். அதற்காக பதிவேடு எந்த வருடத்திலிருந்து எழுதி வருகிறேன் என்றால் 2002 வருடத்திலிருந்து தற்போது வரை எழுதி வருகிறேன். எத்தனை வருடமாக நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன் என்றால் 10 வருடமாக டிப்பர் வேலை செய்து வந்தேன். ஒர்க்ஷாப் வைத்து 30 வருடம் ஆகிறது. பிராமிசரி நோட்டு மற்றும் முத்திரை வில்லை யார் வாங்கியது என்றால் பிரதிவாதி தான் வாங்கி வந்தார். பிராமிசரிநோட் வா.த.சா.ஆ1ல் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையது அல்ல என்றால் சரியல்ல. சாட்சிகள் மற்றும் பாண்டு எழுதியவர் அனைவரும் ஒரே பேனாவில் கையெழுத்திட்டார்களா என்றால் அனைவரும் ஒரே பேனாவில் தான் கையெழுத்திட்டார்கள். ராஜேந்திரன் அதே பேனாவில் தான் கையெழுத்திட்டாரா என்றால் அதே பேனாவில் தான் கையெழுத்திட்டார். சாட்சி பின்னிட்டு தானாக பிரதிவாதி அதே பேனாவில் கையெழுத்திட்டாரா என்று தற்போது ஞாபகம் இல்லை என்று சொல்கிறார். 17.4.2021ல் பிரதிவாதி என்னிடம் ரூ.1,00,000/- பணமும் வாங்கவில்லை பிராமிசரிநோட்டும எழுதிக்கொடுக்கவில்லை நான் பிரதிவாதியின் மகனுடன் ஏற்பட்ட முன் விரோதத்தை மனதில் வைத்து பிராமிசரிநோட்டை த யாரித்து பிரதிவாதி மீது வழக்கிட்டுள்ளேன என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம எனக்கு கிடைக்கத்தக்கதல்ல வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

x

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.
Sd/A.Tamilselvam,M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram